# கர்ப்ப காலத்தில் வழக்கமான சந்திப்புகள் (அப்பாயின்ட்மென்ட்கள்)



## இறந்து பிறத்தல் (stillbirth) அபாயத்தைக் குறைக்க உதவுதல்

கர்ப்பகால சந்திப்புகளுக்கு வழக்கமாகச் செல்வது உங்களையும் உங்கள் குழந்தையையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். இந்தப் பரிசோதனைகள் உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் கண்காணிக்க உதவுகின்றன. உங்கள் கவலைகள் எதைப் பற்றியும் பேசலாம்; இறந்து பிறத்தல் அபாயத்தை எவ்வாறு குறைப்பது என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

**இறந்து பிறத்தல் அபாயத்தைக் குறைக்க உதவும் வழிகள்**

- புகைபிடித்தல் மற்றும் சிகரெட் புகை படுவதைத் தவிர்க்கவும்.
- உங்கள் குழந்தையின் அசைவுகளை அறிந்து வைத்திருங்கள்; அவை மாறினால் உதவி பெறவும்.
- 28 வாரங்களிலிருந்து, பக்கவாட்டில் படுத்து தூங்கவும்.
- உங்கள் குழந்தை பிறக்கும் நேரம் குறித்து உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநருடன் பேசவும்.

THE SOCIAL POLICY GROUP

Australian Government
Department of Health, Disability and Ageing

## உங்கள் கர்ப்பகால சந்திப்புகள்

ஒவ்வொரு சுகாதார சந்திப்பிலும், உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் பின்வருவனவற்றைச் செய்யலாம்:

- உங்கள் இரத்த அழுத்தத்தை அளத்தல்
- உங்கள் உடல்நலம் மற்றும் நல்வாழ்வை விசாரித்தல்
- உங்கள் குழந்தையின் வளர்ச்சியை அளத்தல்
- உங்கள் குழந்தையின் இதயத் துடிப்பைப் பரிசோதித்தல்
- உங்கள் குழந்தையின் அசைவுகள் குறித்து கலந்துரையாடல்

உங்கள் முதல் சந்திப்பிற்காக உங்கள் சுகாதார சேவையை அல்லது மருத்துவரை (GP) தொடர்பு கொள்ளவும்.

### கர்ப்பத்தின் முதல் 10 வாரங்கள்

இது சற்று நீண்ட சந்திப்பாக இருக்கும். நீங்கள் எதிர்பார்க்கக்கூடியவை:

- உங்கள் கர்ப்பம் பற்றிப் பேசுதல் மற்றும் பிரசவத் தேதியை மதிப்பிடுதல்.
- மனநலம் மற்றும் உணர்வு ரீதியான நல்வாழ்வு உட்பட உங்கள் உடல்நல வரலாறு பற்றிப் பேசுதல்.
- சப்ளிமென்ட்கள் (உணவு துணைப்பொருட்கள்) மற்றும் மருந்துகள் பற்றி கலந்துரையாடல்.
- உங்கள் உயரம், எடை மற்றும் இரத்த அழுத்தத்தை அளத்தல்.
- இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகளுக்கான பரிந்துரை (referral) பெறுதல்.
- மரபணு (உயிரியல்) திரையிடல் தேர்வுகள் பற்றி கலந்துரையாடல்.
- உங்கள் முதல் அல்ட்ராசவுண்ட் (ultrasound) பரிசோதனைக்கான பரிந்துரை பெறுதல்.
- புகைபிடித்தல், சிகரெட் புகை படுதல் மற்றும் ஆதரவு பெறக்கூடிய இடங்கள் பற்றி கலந்துரையாடல்.

**தடுப்பூசி:** கர்ப்பத்தின் எந்தக் கட்டத்திலும் நீங்கள் ஃப்ளூ (influenza) தடுப்பூசியைப் பெறலாம்.

### 16-19 வாரங்கள்

- உங்கள் கர்ப்பத்தின் ஆரம்பகால முடிவுகள் பற்றியும், சுகாதார சப்ளிமென்ட்கள் தேவையா என்பது பற்றியும் கலந்துரையாடவும்.
- உங்கள் 18 – 20 வார மார்பாலஜி  ஸ்கேன் (morphology scan) பரிசோதனையை ஏற்பாடு செய்யவும்.

### 18-20 வாரங்கள்

- மார்பாலஜி  ஸ்கேன் (morphology scan) செய்துகொள்ளவும். இது உங்கள் குழந்தையின் உறுப்புகள், வளர்ச்சி மற்றும் மேம்பாட்டைப் பரிசோதிக்கும் நீண்ட, விரிவான அல்ட்ராசவுண்ட் ஆகும்.

**தடுப்பூசி:** 20 – 32 வாரங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும், கக்குவான் இருமல் (whooping cough) தடுப்பூசியைப் பெறலாம்.

## 24-28 வாரங்கள்

- கர்ப்பகால நீரிழிவு (இரத்தத்தில் சர்க்கரை அதிகம்) பரிசோதனை.
- (தேவைப்பட்டால்) பிற வழக்கமான இரத்தப் பரிசோதனைகள் செய்துகொள்ளவும்.
- 28 வாரங்களிலிருந்து, பக்கவாட்டில் படுத்து தூங்கவும்.

**ஊசி:** சுமார் 28 வாரங்களில், உங்களின் முந்தைய இரத்தப் பரிசோதனையைப் பொறுத்து, உங்களுக்கு anti-D ஊசி தேவைப்படலாம்.

## 29-34 வாரங்கள்s

- உங்கள் பரிசோதனை முடிவுகள் பற்றி கலந்துரையாடவும். **குறிப்பு:** நீங்கள் முன்பு anti-D ஊசி போட்டிருந்தால், இந்த நேரத்தில் இன்னொரு ஊசி போடப்படும்.
- உங்கள் பிரசவத் திட்டம் (birth plan) மற்றும் வலி நிவாரணத் தேர்வுகள் பற்றி கலந்துரையாடவும்.

**தடுப்பூசி:** 28 முதல் 36 வாரங்களுக்கு இடையில் எப்போது வேண்டுமானாலும், RSV தடுப்பூசியைப் பெறலாம்.

## 35-37 வாரங்கள்

- உங்கள் குழந்தையின் நிலை மற்றும் குழந்தை உங்கள் இடுப்புக்குள் (pelvis) எவ்வளவு கீழே இறங்கியுள்ளது என்பதைப் பரிசோதித்தல்.
- பிரசவம் தொடர்பான தகவல்கள், மனநல ஆதரவு, உங்கள் புதிய குழந்தையைப் பராமரித்தல், மற்றும் பிற தகவல்கள் — புதிதாகப் பிறந்த குழந்தைக்கான திரையிடல் பரிசோதனைகள், உங்கள் குழந்தைக்கான வைட்டமின் K போன்றவை — பற்றி கலந்துரையாடல்.
- **பரிசோதனை:** உங்களுக்கு குரூப் B ஸ்ட்ரெப்டோகாக்கஸ் (GBS) திரையிடல் பரிசோதனை பரிந்துரைக்கப்படலாம். உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் உங்கள் யோனியின் கீழ்ப்பகுதி மற்றும் மலவாயிலிருந்து ஸ்வாப் (swab) மாதிரி எடுக்கலாம். பரிசோதனை நேர்மறையாக (positive) இருந்தால், உங்கள் குழந்தையைப் பாதுகாக்க பிரசவத்தின்போது பொதுவாக ஆண்டிபயாடிக் மருந்துகள் வழங்கப்படும்.

## 38-40 வாரங்கள்

- உங்கள் குழந்தையின் நிலை மற்றும் குழந்தை உங்கள் இடுப்புக்குள் (pelvis) எவ்வளவு கீழே இறங்கியுள்ளது என்பதைப் பரிசோதித்தல்.
- உங்கள் குழந்தை பிறப்பதற்கான மிகவும் பாதுகாப்பான நேரம் பற்றி கலந்துரையாடவும்.

## 41 வாரங்கள்

- நீங்கள் இன்னும் குழந்தை பெற்றெடுக்கவில்லை என்றால், பிரசவத்தைத் தூண்டுவதற்கான தேர்வுகள் பற்றிய கலந்துரையாடல்.

இவை வழக்கமான சந்திப்புகள்; ஆனால் தேவைப்பட்டால் உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் கூடுதல் சந்திப்புகளைப் பரிந்துரைக்கலாம்.

சந்திப்புகளுக்கு இடையில் உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், உங்கள் சுகாதார சேவையைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது **Pregnancy, Birth and Baby Hotline** என்ற சேவையை **1800 882 436** என்ற எண்ணில் அழைக்கலாம்.

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், சந்திப்புகளை முன்பதிவு செய்யும்போது உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரிடம் தெரிவிக்கவும்.

